## ப்ரீ-எக்ளாம்ப்ஸியா குறித்து நீங்கள் அவசியம் அறிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள்:

பெரும்பாலான மக்கள் எண்ணிக்கொண்டிருப்பதைக் காட்டிலும், ப்ரீ-எக்ளாம்ப்ஸியா மிகவும் அதிகமாக காணப்படுகிறது. உண்மையில், கர்ப்பகாலத்தின்பொழுது ஏற்படும் தீவிரமான சிக்கல்களில் இதுவே மிகவும் அதிகமாக ஏற்படுகிறது. உயிருக்கே ஆபத்து விளைவிக்கக்கூடிய அளவிற்கு ப்ரீ-எக்ளாம்ப்ஸியா ஒரு ஆபத்தான நோய் ஆகும். இதைத் தவிர்க்க இயலும் என்பது மிகவும் குறைந்தளவே உணரப்பட்டுள்ளது.

### ப்ரீ - எக்ளாம்ப்ஸியா குறித்த முக்கிய தகவல்கள்:

**ப்ரீ-எக்ளாம்ப்ஸியா என்றால் என்ன?**

இது கர்ப்ப காலத்தின் பொழுது தாய்மார்கள் மற்றும் அவர்களுடைய கர்ப்பப்பையிலுள்ள குழந்தைகளை மட்டும் பாதிக்கும் நோய் ஆகும். பெரும்பாலான நபர்களுக்கு இது குறைந்தளவே உருவாகிறது. இருப்பினும் சில சமயங்களில் ஆபத்தையும் ஏற்படுத்துகிறது. மிகவும் தீவிரமாக ஏற்படும் பாதிப்பு 'எக்ளாம்ப்ஸியா' எனப்படும் வலிப்பே ஆகும். இதன் காரணமாகவே இது ப்ரீ-எக்ளாம்ப்ஸியா என்று அழைக்கப்படுகிறது.

**இது யாருக்கு ஏற்படும்?**

பரந்தளவில் நோக்கினால், பத்து கர்ப்பிணிப் பெண்களில் ஒருவர் இதனால் பாதிக்கப்படுவார். முதன் முதலாக கர்ப்பமாகும் பெண்களுக்கும், 40 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கும், பிஎம்ஐ (BMI) 35-க்கு மேல் உள்ளவர்களுக்கும், ப்ரீ - எக்ளாம்ப்ஸியா பாரம்பரியமாகக் காணப்படும் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களுக்கும், கடைசியாக குழந்தை பிறந்து 10 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் ஆனவர்களுக்கும், உயர்ரத்த அழுத்தம், சர்க்கரை வியாதி அல்லது சிறுநீரக நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், ஒன்றிற்கு மேற்பட்ட குழந்தை கர்ப்பப்பையில் உள்ளவர்களுக்கும் மற்றும் முன்பு இதுபோல் ஒரே சமயத்தில் ஒன்றிற்கு மேல் குழந்தை பெற்றவர்களுக்கும் இந்நோய் ஏற்படும் ஆபத்து அதிகமாக உள்ளது.

**எதன் காரணமாக இந்நோய் உண்டாகிறது?**

தொப்புள்கொடியில் ஏற்படும் பாதிப்பின் காரணமாக குழந்தைக்கு இரத்த ஓட்டம் செல்வது பாதிக்கப்படுகிறது. கர்ப்பகாலத்தின் ஆரம்ப நிலையில் இப்பிரச்சனை உருவாகும் ஆனால் மிகவும் தாமதமாக, பொதுவாக கடைசி கால வாரங்கள் இந்நோயினால் உடல்நலக்குறைவு ஏற்படும்.

**இதன் அறிகுறிகள் என்ன?**

உயர் இரத்த அழுத்தம், தாயின் சிறுநீரில் புரதம் காணப்படுதல் மற்றும் சில சமயங்களில் கருப்பையில் குழந்தை வளர்ச்சி குறைவாக காணப்படுதல் ஆகியவை இதன் அறிகுறிகளாகும். இதனை கர்ப்பகாலத்தில் வழக்கமாக செய்யப்படும் சோதனைகள் மூலமாக அறிந்துகொள்ளலாம்.

**எவ்வாறு இந்நோய்க்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது?**

ப்ரீ-எக்ளாம்ப்ஸியாவால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு பொதுவாக மருத்துவமனையிலோ அல்லது பகல் வார்டிலோ, கவனமாக சிகிச்சை அளிக்கவேண்டும். இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்துவதற்கான மருந்துகளை அளிக்கலாம்.

**இதனை குணப்படுத்த இயலுமா?**
குழந்தை பிறந்த பிறகு, குழந்தையுடன் இந்நோய்க்கு காரணமான தொப்புள்கொடி வெளியேற்றப்பட்ட பிறகே இந்நோய் குணமாகும். இதன் காரணமாகவே ப்ரீ-எக்ளாம்ப்ஸியாவால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான பெண்களுக்கு தூண்டப்பட்டு, குறிப்பிட்ட காலத்திற்கு முன்பாகவே மகப்பேறு நிகழ்கிறது.

**இந்நோய் மீண்டும் வருமா?**
சில பெண்களுக்கு மீண்டும் வரும். சராசரியாக 20 பெண்களில் ஒருவருக்கே இந்நோய் மீண்டும் ஏற்படும்.

**கர்ப்பகாலத்தின் ஆரம்பநிலையிலேயே இதனை முன்கூட்டி அறிய முடியுமா?**
தற்போதைக்கு அறிய இயலாது. எனவே கர்ப்பகால பரிசோதனை நிலையங்களில் தவறாமல் பரிசோதனை செய்துகொண்டால்தான் இந்நோய் ஏற்படும் வாய்ப்பு உள்ள நபர்களை அடையாளம் காண இயலும்.

**இதனை தவிர்க்க இயலுமா?**
சில சமயங்களில், மருத்துவர்களின் மருத்துவ கண்காணிப்பில் தினமும் சிறிய அளவிலான ஆஸ்பிரின் எடுத்துக்கொண்டால் தவிர்க்கலாம் என்று கூறினாலும் இதனை முழுமையாக நம்ப இயலாது.

**இதற்கு முன்பே பாதிக்கப்பட்டிருப்பவர்கள் எவ்வாறு இருக்கவேண்டும்?**
நிபுணர்களின் ஆலோசனையைப் பெறவேண்டும். கர்ப்பகால பரிசோதனைகளை அடிக்கடி மேற்கொள்ள வலியுறுத்த வேண்டும். எந்த சோதனையையும் தவறவிடக்கூடாது. ஏதேனும் அடையாளங்கள் அல்லது அறிகுறிகளை கண்டால் அதனை உடனடியாக உங்களுடைய பேறுகால பணிப்பெண் அல்லது மருத்துவரிடம் தெரிவிக்கவும்.

**கவனத்தில் கொள்ளவேண்டிய அறிகுறிகள்**

- கடுமையான தலைவலி தொடர்ந்து காணப்படும்
- மங்கிய பார்வை, கண்களில் பளிச்சொளிகள் அல்லது புள்ளிகள் தோன்றுதல்
- உங்களுடைய விலா எலும்புகளுக்கு கீழ், குறிப்பாக வலதுபக்க விலா எலும்புகளுக்கு கீழ் கடுமையான வலி ஏற்படுதல்
- வாந்தி எடுத்தல் (கர்ப்பகால ஆரம்பத்தில் உருவாகும் ‘காலைநேர உடல்நலக் குறைபாடு’ அல்ல)

**ப்ரீ-எக்ளாம்ப்ஸியா குறித்த அனைத்து அம்சங்கள் தொடர்பான ஆலோசனைகள் அல்லது தகவல்களை பெற 0208 427 4217 என்ற எண்ணில் ‘ஆக்ஷன் ஆன் ப்ரீ - எக்ளாம்ப்ஸியா’ அமைப்பைத் தொடர்பு கொள்ளலாம்.**

Action on Pre-eclampsia
84-88 Pinner Road
Harrow
Middlesex
HA1 4HZ

மின் அஞ்சல்: info@apec.org.uk

www.apec.org.uk

அறக்கட்டளை பதிவு எண்: 1013557
நிறுவன பதிவு எண்: 2736320